செ.வெ.எண்: 44 நாள்: 17.11.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் 2017-18ம் ஆண்டிற்கு முன்னுரிமை கடனாக ரூ.3863.42 கோடி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (நபார்டு வங்கி) சார்பில் தயாரித்த 2017-18ம் ஆண்டிற்கான வளம் சார்ந்த கடன் திட்ட அறிக்கையை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (17-11-2016) வெளியிட்டு கூறியதாவது:

தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (நபார்டு வங்கி) சார்பில் ஒவ்வொரு ஆண்டும் விவசாயம் மற்றும் அதனை சார்ந்த தொழில்களை மேம்படுத்தும் வகையில் மாவட்ட வாரியான வளம் சார்ந்த கடன் திட்ட அறிக்கையை 1989ம் ஆண்டு முதல் தயாரித்து வெளியிடப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் 2017-18ம் ஆண்டிற்கு வளம் சார்ந்த கடன் திட்ட அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இதில் குறுகிய கால பயிர்க்கடனாக ரூ.2147.93 கோடியும், வேளாண் தொழில் சார்ந்த காலக்கடனாக ரூ.611.80 கோடியும் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் ரிசர்வ் வங்கியின் புதிய முன்னுரிமை கடன் கொள்கையின்படி விவசாய தானிய சேமிப்பு கிட்டங்கிகள் அமைப்பதற்கு ரூ.223.61 கோடியும், உணவக பதனிடு தொழில்களுக்கு ரூ.254.63 கோடியும், ஏற்றுமதி தொழில்களுக்கு ரூ.57 கோடியும், கல்விக்கடனுக்கு ரூ.58.15 கோடியும், புதிய வீடுகள் கட்ட ரூ.94.80 கோடியும், புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு ரூ.6.06 கோடியும், சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.223.40 கோடியும், கூட்டுப்பொறுப்புக்குழுக்களுக்கு ரூ.40.05 கோடியும் என மொத்தம் ரூ.3863.42 கோடி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த வளம்சார்ந்த கடன் திட்டமானது ”2022க்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல்” என்ற நோக்கத்தை உடையது. விவசாயிகள் கால்நடைவளர்ப்புடன், உள்நாட்டு மீன்வளர்ப்பு, தேனீ வளர்ப்பு போன்ற தொழில்களிலும், விவசாயம் சாரா தொழில்களிலும் ஈடுபட்டு வருமானத்தை பெருக்க வேண்டும். மேலும், நபார்டின் வளம்சார்ந்த கடன் திட்டத்தில், பகுதி சார்ந்த திட்டங்களாக புதுக்கோட்டை மாவட்டத்தின் 3 ஒன்றியங்களில் ”பந்தல் காய்கறி” வளர்ப்பிற்காக ரூ.475.20 இலட்சங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சிறு குறு விவசாயிகளின் வருமானத்திற்கு உத்திரவாதம் கொடுக்கும், இந்த முக்கியமான செயல்பாடிற்காக மாவட்டத்தில் உள்ள சிறு குறு விவசாயிகளுக்கு கடன்வழங்க வங்கியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் இவ்வளம்சார்ந்த கடன் திட்டமானது, துறை வாரியான உள்கட்டமைப்பு தேவைகளான, ஒவ்வொரு ஒன்றியத்திலும் உலர்களங்கள், சேமிப்புக்கிடங்குகளுடன் கூடிய பதப்படுத்தும் நிலையங்கள், 5451 குளங்களை தூர்வாரி மறுசீரமைப்பு செய்தல், வாய்க்கால் வரத்துவாரிகள், குளக்கரைகள் ஆகியவற்றை பலப்படுத்துதல், மடைகளை பழுதுபார்த்தல், தெற்கு வெள்ளாரில் தடுப்பணை கட்டுதல், அறந்தாங்கியில் தென்னை வணிக வளாகம் கட்டுதல், 3 இடங்களில் மீன் இறங்கும் மையங்கள் அமைத்தல், பண்ணைக் குட்டைகள் அமைத்தல் மற்றும் சமுதாய ஆழ்துளாய் கிணறுகள் அமைத்தல் போன்றவற்றை உள்ளடக்கியதாகவும் உள்ளது.

மேலும், நபார்டின் ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ், நமது மாவட்டத்தில் ரூ.281.50 கோடி மதிப்பிலான 164 திட்டங்களான குடிதண்ணீர் ரூ.153.43 கோடி, பள்ளிக்கூடங்கள் ரூ.19.68 கோடி, சாலை மற்றும் பாலங்கள் ரூ.60.58 கோடி, சேமிப்பு குடோன்கள் ரூ.20.68 கோடி, கால்நடை மருந்தகங்கள் ரூ.5.16 கோடி, விவசாய விரிவாக்க மையங்கள் ரூ.5.70 கோடி மற்றும் நீர்ப்பாசனம் ரூ.9.58 கோடி மதிப்பிலான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே அனைவரும் இதனை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் காரைக்குடி முதன்மை மண்டல மேலாளர் (ஐ.ஓ.பி) திருமதி.ருக்மணிலெட்சுமணன், நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி மேலாளர் திரு.எஸ்.சோமசுந்தரம், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.பி.சுலைமான், திட்ட இயக்குநர் (மா.ஊ.வ.மு) திரு.சந்தோஷ்குமார், வங்கிகளின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**